# தமிழ் இணையக் கல்விக்கழகம்
# சென்னை – 600 025.

**நேரடி எழுத்துத் தேர்வு (Written Examination)**

**ஜனவரி – பிப்ரவரி 2026**
**மூகரம் (LM00)**

**நேரம் : 3.00 மணி நேரம்** **மதிப்பெண் 75**

## பகுதி – அ
## படித்தல் திறன்

**I. கீழே கொடுக்கப்பட்டுள்ள பத்தியினைப் படித்து கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும் :–**

***Read the passage and answer the questions that follow :–*** **(5x 1= 5)**

**மூடுல் (MOODLE)**

மூடுல் (MOODLE) என்பது Modular Object – Oriented Dynamic Learning Environment என்ற ஆங்கிலத் தொடரின் சுருக்கமாகும். 1999–ஆம் ஆண்டிலிருந்து மெல்ல வளர்ந்துவரும் மூடுல் தற்போது உலகின் 100 மொழிகளில் செயலாற்றி வருகிறது. கற்கும் மாணவர்களை மனத்தில்கொண்டு உருவாக்கப்பட்ட இந்த மென்பொருள் இணையவழிக் கல்விக்குப் பெரிதும் பயன்படுகிறது. மூடுல் ஒரு திறவூற்று (Open source) மென்பொருள் என்பதால் இதை அனைவரும் கட்டணமின்றிப் பயன்படுத்தலாம்.

**வினாக்கள் :**

1. MOODLE என்பதன் விரிவாக்கம் யாது?
2. மூடுல் தற்போது எத்தனை மொழிகளில் செயலாற்றி வருகிறது?
3. மூடுல் மென்பொருள் யாருக்காக உருவாக்கப்பட்டது?
4. மூடுல் மென்பொருளின் பயன் யாது?
5. மூடுல் மென்பொருள் எந்த ஆண்டிலிருந்து செயல்படத் தொடங்கியது?

## பகுதி ஆ
## மொழிபெயர்ப்புத் திறன்

**II. கீழ்க்காணும் தமிழ்ப் பத்தியினை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கவும் :–**
***Translate the following Tamil passage into English : –*** **(1x5=5)**

அன்பிற்கு வலிமை மிகுதி. அன்பால் எதனையும் பெறலாம். அன்புடையோர் அதனை மறைக்க இயலாது. அவருடைய கண்களிலிருந்து வழியும் கண்ணீரே அவர் நம்மீது எத்தகைய அன்பு கொண்டுள்ளளார் என்பதை வெளிப்படுத்திவிடும்.

**III. கீழ்க்காணும் ஆங்கிலப் பத்தியினைத் தமிழில் மொழிபெயர்க்கவும் :–**
***Translate the following English passage into Tamil :–*** **(1x5=5)**

A charity is an organization which raises money in order to help people who are sick or very poor, or who have a disability.

## பகுதி – இ
## இலக்கணப்பகுதி

**IV. கீழ்க்காணும் உரைப்பகுதியில் உரிய நிறுத்தக்குறி இட்டு எழுதுக.**
***(Punctuation marks should be used in the text below.)*** **(1x 5= 5)**

இயற்கைத் தாத்தா என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படுபவர் நம்மாழ்வார் இவர் தமிழ்நாட்டிலுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் பிறந்தார் இயற்கையின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். வேளாண்மையில் இயற்கைமுறைக்கு முதன்மை அளித்தார் இந்திய மரபு விதைகளை மீட்டெடுத்து மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தார்

**V. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
***Answer any Five questions*** **(5 x 2=10)**

1. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன?
2. நேர்க்கூற்று என்றால் என்ன?
3. எதிர்மறை பெயரெச்சம் எத்தனை வகைப்படும்?
4. வினைமுற்று காட்டுபவை யாவை?'

5. இரட்டுற மொழிதல் என்றால் என்ன?
6. வேற்றுமை உருபுகளைக் கூறுக.
7. மரபுத்தொடர் இரண்டினை எழுதுக.
8. தனிமொழிக்கான இரண்டு எடுத்துக்காட்டினை எழுதுக.
9. தன்வினை என்றால் என்ன?

## பகுதி – ஈ
## பாடப்பகுதி

**VI. எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக:–**
***Answer all questions in a word /Sentence.*** **(5 x 1=5)**

1. தஞ்சைப் பெரிய கோவிலுக்கு வைக்கப்பட்ட பெயர் யாது?
2. பீத்தோவன் வியன்னா நகரில் யாரைச் சந்திக்கச் சென்றார்?
3. நாலடியாருக்கு வழங்கப்பெறும் வேறுபெயர் யாது?
4. மின்விளக்கைக் கண்டுபிடித்தவர் யார்?
5. மணிமேகலைக்கு அட்சயப் பாத்திரம் எங்குக் கிடைத்தது?

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் <u>மூன்று வரிகளில்</u> விடை தருக:–**
***Answer any Five questions in three lines each.*** **(5 x 2= 10)**

1. அறிவியல் புனைகதையில் இடம்பெறும் கதைமாந்தர்கள் எப்படிப்பட்டவர்கள்?
2. தொழிற் புரட்சியினால் ஏற்பட்ட பாதிப்புகளுள் இரண்டு எழுதுக.
3. நிறைகோலும் ஆசிரியரும் குறித்து நன்னூல் கூறுவது யாது?
4. ஆதிச்சநல்லூரில் கிடைத்த அணிகலன்கள் யாவை?
5. இயற்கை உழவு முறை என்றால் என்ன?
6. சிறந்த தொழில் முனைவோர்களாகத் தங்கள் தடத்தை இவ்வுலகில் பதிக்க ஒரு மனிதனுக்கு எத்தகைய பண்புகள் தேவை?
7. மரம் வளர்ப்பதால் விளையும் நன்மைகள் யாவை?
8. ஷெல்லியின் படைப்புகள் நான்கினை எழுதுக.

**VIII. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:–**
***Answer any one of the following questions in essay format:*** **(1x 10 = 10)**

1. விசாரிப்பு சிறுகதையைச் சுருக்கமாக எழுதுக.
2. ஆபிரகாம் பண்டிதரின் பண்புநலன்கள் குறித்து மதிப்பிடுக.
3. அகழாய்வு செய்வதன் நோக்கங்களை விவரித்து எழுதுக.

## பகுதி – உ
## செய்யுள் பகுதி

**IX. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக:–**
*Answer any Five questions .* (5 x 2= 10)

1. 'தம் வாழ்நாளில் எதனை உணருவதில்லை' என்று சமணமுனிவர்கள் கூறுகின்றனர்?
2. மலையின் உயர்வைவிட மிகப் பெரியது என்று எதனைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர்?
3. ஔவையார் வான்கோழியின் செயலுக்கு ஒப்பாக கூறுவது எதனை?
4. வைத்தூறு என்பதன் பொருள் யாது?
5. மருத்துவம் எப்படி செய்ய வேண்டும் என்று திருக்குறள் வலியுறுத்துகிறது?
6. சிச்சிலி மீன்கொத்திப் பறவையின் இயல்பு பற்றிப் பதிற்றுப்பத்துக் கூறுவன யாவை?
7. உலகத்திலுள்ளவர்களின் மனத்தில் எல்லாம் இடம்பிடிக்க என்ன செய்ய வேண்டும்?
8. வள்ளலார் எதனைக் கண்டு வருந்தினார்?

## பகுதி – ஊ
## படைபாற்றல் பகுதி

**X. ஏதேனும் ஒன்றனுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:–**
*Write an essay any one of the following questions* (1x 10= 10)

**அ) கல்வி என இறுதியில் முடியும்படி மூன்று சொல் கொண்ட பாடலைக் ஐந்து அடிக்குக் குறையாமல் உருவாக்கி எழுதுக.**

உதவி செய்தே வாழ்ந்திடுவோம்

உள்ளம் மகிழ்ந்தே கொடுத்திடுவோம்

-----------------------------
-----------------------------
----------------------------
-----------------------------
-----------------------------
-----------------------------

**ஆ) கீழ்க்காணும் படத்திற்குப் பொருத்தமாக வினாக்கள் உருவாக்குக.**

**(ஏன்/ எவ்வாறு / எப்படி / எங்கு / யார்)**



**இ) கீழ்க்காணும் படங்களைக் கொண்டு சிறுகதை எழுதுக.**



*****